# நவம்பர் – 21 – புதன்

## கன்னி மரியாவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்

## அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்ந்திடுக! அல்லேலூயா! - திபா 150 : 6

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 4 : 1 – 11

சகோதர சகோதரிகளே! தன்பின் நான் ஒரு காட்சி கண்டேன். விண்ணகத்தில் ஒரு கதவு திறந்திருந்தது. நான் முதலில் கேட்ட அதே குரல் எக்காளம்போல முழங்கியது. "இவ்விடத்துக்கு ஏறி வா. இனி நடக்கவேண்டியதை உனக்குக் காட்டுவேன்" என்றது. உடனே தூய ஆவி என்னை ஆட்கொண்டது. விண்ணகத்தில் அரியணை ஒன்று இருந்தது. அதில் ஒருவர் வீற்றிருந்தார். அவரது தோற்றம் படிகக்கல்போலும், மாணிக்கம்போலும் இருந்தது. மரகதம்போன்ற வானவில் அந்த அரியணையைச் சூழ்ந்திருந்தது. அரியணையைச்சுற்றி இருபத்து நான்கு அரியணைகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் இருபத்து நான்கு மூப்பர்கள் வீற்றிருந்தார்கள். அவர்கள் வெண்ணாடை அணிந்திருந்தார்கள் தலையில் பொன்முடி சூடியிருந்தார்கள். அரியணையிலிருந்து மின்னலும்இ பேரிரைச்சலும் இடிமுழக்கமும் கிளம்பின. ஆரியணைமுன் ஏழு தீவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன. அவை கடவுளின் ஏழு ஆவிகளே. அரியணை முன் பளிங்கையொத்த தெளிந்த கடல் போன்ற ஒன்று தென்பட்டது. நடுவில் அரியணையைச் சுற்றிலும் நான்கு உயிர்கள் காணப்பட்டன. முன்புறமும்இ பின்புறமும் அவற்றுக்குக் கண்கள் இருந்தன. அவ்வுயிர்களுள் முதலாவது சிங்கம்போலும், இரண்டாவது இளங்காளை போலும் தோன்றின. மூன்றாவதற்கு மனித முகம் இருந்தது, நான்காவது பறக்கும் கழுகை ஒத்திருந்தது. இந்த நான்கு உயிர்கள் ஒவ்வொன்றுக்கும் ஆறு சிறகுகள் இருந்தன் உள்ளும், புறமும் கண்கள் நிறைந்திருந்தன. "தூயவர், தூயவர், தூயவர், எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும், இருக்கின்றவரும், வரவிருக்கின்றவரும் இவரே" என்று அந்த உயிர்கள் அல்லும், பகலும் இடையறாது பாடிக்கொண்டிருந்தன. அரியணையில் வீற்றிருப்பவரை, என்றென்றும் வாழ்பவரை அவை போற்றிப் புகழ்ந்து அவருக்கு நன்றி செலுத்தியபோதெல்லாம், இருபத்து நான்கு மூப்பர்கள் அரியணையில் வீற்றிருந்தவர் முன் விழுந்து, என்றென்றும் வாழ்கின்ற அவரை வணங்கினார்கள். தங்கள் பொன்முடிகளை அரியணைமுன் வைத்து, "எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே, மாட்சியும், மாண்பும் வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர். ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் நீரே. உமது திருவுளப்படியே அவை உண்டாயின, படைக்கப்பட்டன" என்று பாடினார்கள்.

**பதில்பாடல் :** தூயவர் தூயவர் தூயவர் எல்லாம் வல்ல ஆண்டவர்.

## நற்செய்தி : லூக்கா 19 : 11 - 28

அக்காலத்தில் இயேசு எருசலேமை நெருங்கி வந்து கொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இறையாட்சி உடனடியாகத் தோன்றப்போகிறது என்று நினைத்தார்கள். அப்போது இயேசு மேலும் ஓர் உவமையைச் சொன்னார்"உயர் குடிமகன் ஒருவர் ஆட்சியுரிமை பெற்றுவரத் தொலை நாட்டிற்குப் போகப்புறப்பட்டார்.அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப்பேரை அழைத்து, பத்து மினாக்களை அவர்களிடம் கொடுத்து அவர்களை நோக்கி, "நான் வரும்வரை இவற்றை வைத்து வாணிகம் செய்யுங்கள்" என்று சொன்னார்.அவருடைய குடிமக்களோ, அவரை வெறுத்தனர். எனவே, "இவர் அரசராக இருப்பது எங்களுக்கு விருப்பமில்லை" என்று சொல்லித் தூது அனுப்பினர்.இருப்பினும் அவர் ஆட்சியுரிமை பெற்றுத் திரும்பிவந்தார். பின்னர் தம்மிடம் பணம் வாங்கியிருந்த பணியாளர் ஒவ்வொருவரும் ஈட்டியது எவ்வளவு என்று அறிய அவர் அவர்களைக் கூப்பிட்டு அனுப்பினார்.முதலாம் பணியாளர் வந்து, "ஐயா, உமது மினாவைக்கொண்டு பத்து மினாக்களைச் சேர்த்துள்ளேன்" என்றார். அதற்கு அவர் அவரிடம், "நன்று, நல்ல பணியாளரே, மிகச்சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்" என்றார். இரண்டாம் பணியாளர் வந்து, "ஐயா உமது மினாவைக் கொண்டு ஐந்து மினாக்களை ஈட்டியுள்ளேன்" என்றார். அவர், "எனவே நீர் ஐந்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்" என்று அவரிடமும் சொன்னார்.வேறொருவர் வந்து, "ஐயா, இதோ உமது மினா. ஒரு கைக்குட்டையில் முடிந்து வைத்திருக்கிறேன்.ஏனெனில் நீர் கண்டிப்புள்ளவர் என்று உமக்கு அஞ்சி இப்படிச் செய்தேன். நீர் வைக்காததை எடுக்கிறவர் நீர் விதைக்காததை அறுக்கிறவர்" என்றார்.அதற்கு அவர் அவரிடம், "பொல்லாத பணியாளே, உன் வாய்ச் சொல்லைக் கொண்டே உனக்குத் தீர்ப்பிடுகிறேன். நான் கண்டிப்பானவன் வைக்காததை எடுக்கிறவன் விதைக்காததை அறுக்கிறவன் என உனக்குத் தெரியுமல்லவா? அப்படியானால் ஏன் என்பணத்தை வட்டிக்கடையில் கொடுத்து வைக்கவில்லை? நான் வந்து அதை வட்டியோடு சேர்த்துப் பெற்றிருப்பேனே" என்றார்.பின்பு அருகில் நின்றவர்களிடம், "அந்த மினாவை அவனிடமிருந்து எடுத்து, பத்து மினாக்கள் உள்ளவருக்குக் கொடுங்கள்" என்றார்.அதற்கு அவர்கள், "ஐயா, அவரிடம் பத்து மினாக்கள் இருக்கின்றனவே" என்றார்கள்.அவரோ, "உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். இல்லாதோரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்" என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.மேலும் அவர், "நான் அரசனாக இருப்பதை விரும்பாத என் பகைவர்களை இங்குக்கொண்டு வந்து என்முன் படுகொலை செய்யுங்கள்" என்று சொன்னார். இவற்றைச் சொன்னபின்பு இயேசு அவர்களுக்கு முன்பாக எருசலேமுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

**தியானம்:** இறைவன் தான் படைத்த ஒவ்வொரு மனிதருக்கும் தனித்தனி திறமைகளைக் கொடுத்து அத்திறமைகளை இறைவனுடைய மாட்சிமைக்காகவும், பிறருடைய முன்னேற்றத்திற்காகவும் பயன்படுத்த அழைப்பு விடுப்பதாக மினா உவமை தெரிவிக்கின்றது. நம்மைத் தேடிவருகின்ற சவால்களை துணிவோடு சந்திக்கவேண்டும். வெவ்வேறு அளவில் தாலந்துகளைப் பெற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்தி மேலும் செல்வம் ஈட்டினார்கள். ஆனால் ஒருவர் மட்டும் தாலந்தைப் பயன்படுத்தாமல் நிலத்தில் புதைத்துவைத்தார். பயன்படுத்தாத செல்வம் பாழாய்ப்போகும் என்னும் உண்மையை நற்செய்தி கற்பிக்கிறது. பிறருடைய திறமைகளையும் இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்த ஊக்குவிப்பதும் இறைப்பணியே. நற்செய்தியில் தலைவர் பணியாளர்கள் எல்லாருக்கும் மினாக்களைக் கொடுத்து விட்டு நெடும்பயணம் செல்கிறார். நீண்டநாட்களுக்குப் பிறகு திரும்பி வந்து மினாக்களைப் பெற்றவர்களிடமிருந்து கணக்குக் கேட்கிறார். முதலில் வந்த பணியாளர்கள் சரியாக கணக்குக் கொடுக்க, கடைசியில் வந்தவரோ சரியான முறையில் கணக்குக் கொடுக்காமல், தண்டனையைப் பெறுகின்றார். இச்செயல் நமக்கு ஒரு சில உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது. கடவுளின் படைப்பில் நாம் அனைவரும் சமமானவர்களே. நாமனைவரும் ஒன்றே என்ற உண்மையை பறைசாற்றி கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் திறமைகளை, வாய்ப்பு வசதிகளை சரியான முறையில் பயன்படுத்தவேண்டும் என்பதாகும். உவமையில் வரும் முதல் இரண்டு பணியாளர்கள் தலைவர் தங்களுக்குக் கொடுத்த மினாக்களை சரியான முறையில் பயன்படுத்தி தலைவரால் பாராட்டப்படுகிறார்கள். அதே நேரத்தில் கடைசியில் வந்த பணியாளரோ, தலைவர் கொடுத்த மினாவை சரியான முறையில் பயன்படுத்தவில்லை. அதனால் தண்டனையைப் பெறுகின்றார். நாமும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் சந்தர்ப்பங்களை வசதிவாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தாதபோது கடவுளிடமிருந்து தண்டனையைப் பெறுகின்றோம் என்பது உறுதி. இந்த உவமையில் சொல்லப்பட்ட பணியாளர்களைப் போல, ஒவ்வொருவரும் எங்களுடையதிறமைகள் சந்தர்ப்பங்கள நேரம், சக்தி, வசதிவாய்ப்புக்கள் எல்லாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தி, நற்செய்தி பரப்புப்பணியில் ஈடுபட்டால் இயேசு நிச்சயம் சந்தோசப்படுவார் என நற்செய்தி தெரிவிப்பதனால். நிச்சயம் நல்லபலன் கிடைக்கும் ஆனாலும், எமக்கு வழங்கப்பட்ட திறமைகள், சந்தர்ப்பங்கள், வசதிவாய்ப்புக்களை தகுந்த முறையில் பயன்படுத்துகிறோமா?